[1986 மே 6

அமர்த்தப்படுகிறார்கள். அது முழுமையாக இயந்திரமயமாக்கப்பட்ட தொழிற்சாலையாகத்தான் இயங்கி வருவதை நான் பார்த்து இருக்கிறேன். மற்ற வசதிகள் எப்படி இருக்கின்றன என்பதை பார்த்துத்தான் ஒரு காகித ஆலை நிறுவ முடியும். பெரிய காகித ஆலை என்றால் தற்போது ரூ. 250 கோடியாகும். அரசாங்கம் பலவிதமான பரிசோதனைகள் செய்த பின்புதான் ஏற்றுக்கொள்ள முடியும்.

பெரம்பலூர் சர்க்கரை ஆலை.

673—(* வினா எண் 7813) டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், பெரம்பலூர் சர்க்கரை ஆலையின் துணை யூனிட்டை ஜெயங்கொண்டம் தொகுதியில் துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: திருச்சி மாவட்டம் பெரம்பலூர் சர்க்கரை ஆலை துணை யூனிட் ஒன்று பெரம்பலூர் வட்டத்தில் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது. மத்திய அரசிடமிருந்து உரிமம் கிடைத்ததும், ஆலை அமைப்பதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்படும்.

டாக்டர் ந. மாசிலாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டான் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. அங்குள்ளவர்கள் விவசாயத்தை நம்பிக்கொண்டிருக்கிறார்கள். 15 ஏக்கர் பாசனத்தை பெறுகின்றது. அங்கே நெல் விளைவித்து நட்டம் ஏற்படுகின்றது. எனவே, பெரம்பலூர் சர்க்கரை ஆலையினுடைய துணை ஆலையை அங்கே நியமித்தால் அதன் மூலமாக கரும்பு உற்பத்தி செய்து விவசாயிகள் பலன் பெறுவதற்கு வாய்ப்பாக அமையும். எனவே, இதை மனதிலே கொண்டு அமைச்சர் அவர்கள் இந்த ஜெயங்கொண்டான் தொகுதியிலே ஆரம்பிப்பதற்கு முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் துணை சர்க்கரை ஆலையை அமைப்பது பற்றி அரசு ஒரு முடிவு ஏற்கனவே எடுத்து இருக்கிறது. எந்த இடம் என்பது பற்றித்தான் முடிவு எடுக்க

வில்லை. சர்க்கரை இயக்குநர் அவர்கள் அதை தேர்ந்தெடுத்து அங்கே இருக்கின்ற கரும்பு வளர்ச்சி, விவசாய வளர்ச்சி, தண்ணீர் வசதி எல்லாவற்றையும் பார்த்து செய்வார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் பகுதியிலே, ஆண்டிமடம், ஜெயங்கொண்டான், பெரம்பலூர், உப்பிலியாபுரம் மிகவும் பின்தங்கிய பகுதிகள். ஜெயங்கொண்டான் பகுதி அல்லாமல் மற்றைய பகுதிகளில் இந்த சர்க்கரை ஆலை யூனிட் ஆரம்பிக்கின்ற ஒரு நிலை ஏற்பட்டால் பொது மக்கள் மத்தியிலே ஒரு தவறான எண்ணம் உருவாகும். ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் இருக்கின்ற இடங்களில் துவங்குகிறார்கள் என்ற எண்ணம் ஏற்படும். எனவே, இதனை மனதிலே கொண்டு அமைச்சர் அவர்கள் ஜெயங்கொண்டத்திலே துவங்குவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே துணை ஆலை திட்டக்குடி பகுதியிலே அமையும். அது ஜெயங்கொண்டான் வட்டாரத்தில் கரும்பு விளைவதற்கு பயன் படும்.

(முற்பகல் 9-40)

திரு. தி. நா. கோ. அ. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் திருநாவலூர் தொகுதியில் செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைந்துள்ளது. அதன் தொடர்ச்சியாக பி. மில் துவங்குகிற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தென்னாற்காடு மாவட்டம் பற்றிக் கேட்டால் அமைச்சரிடம் பதில் இருக்காது.

திரு. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் சர்க்கரை ஆலையினுடைய துணை யூனிட்டை மாண்புமிகு உறுப்பினர் திரு. மாசிலாமணி அவர்கள் ஏதோ ஆளும் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கக்கூடிய பகுதிகளில் ஆரம்பிப்பதால்

அரசுக்கு ஒரு கெட்ட பெயர் உருவாகக்கூடிய சூழ்நிலை இருப்பது போன்று சொன்னார்கள். எனது தொகுதியில் அதாவது ஆண்டிமடம் தொகுதியில் இதுவரையில் எந்தவிதமான தொழிற்சாலையும் இல்லை. எனது பகுதியில் மாத்தூர். செந்துறை போன்ற பகுதிகளில் இந்தத் தொழிற்சாலை அமைய அனைத்து சாத்தியக்கூறுகளும் இருப்பதாக அதிகாரிகள் அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். இந்த வாய்ப்பை விட்டால் எனது தொகுதியில் வேறு எந்தவிதமான தொழிற்சாலையும் அமைய வாய்ப்பு இல்லாத காரணத்தால் எனது தொகுதியில் அதை அரசு அமைக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆலை அமைப்பது என்பதைப் பொறுத்தவரையில் எல்லாவற்றையும் பரிசீலித்த பிறகுதான் முடிவெடுக்க முடியும். ஆண்டிமடமா, திட்டக்குடியா, ஜெயங்கொண்டமா என்பதைப் பற்றி குழு முடிவெடுத்த பிறகுதான் அறிவிக்க இயலும்.

கல்லூரிகளில் இராணுவக் கல்வி.

674—(* வினா எண் 3020) **திரு. குமரிஅனந்தன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகக் கல்லூரிகளில் எங்கெங்கே இராணுவக் கல்வி பட்டப் படிப்பிற்கு பாடமாக வைக்கப்பட்டுள்ளது?

(ஆ) எத்தனை மாணவர்கள் படிக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 1. குருநானக் கல்லூரி, சென்னை-32, இளநிலை பாதுகாப்பியல்.

2. ஊரிஸ் கல்லூரி, வேலூர், இளநிலை பாதுகாப்பியல்.

3. அரசினர் கலைக் கல்லூரி, உதகமண்டலம், இளநிலை பாதுகாப்பியல்.

4. பாதுகாப்புப் படைப்பயிற்சிக் கல்லூரி, வெலிங்டன் உதகை, நிறைநிலை பாதுகாப்பியல்.